**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender<br>Deposition of witness for | Case No. : CC.60/2025 (26/2022)<br>Prosecution : Addl LW12 as PW5<br>Defence :<br>Court : |
| Name : செந்தில் குமார் | Father's Name: சுப்பிரமணியன்<br>Husband Name: |
| Village: கீழ்பென்னாத்தூர் | Taluk : |
| Caste :<br>Religion: | Calling : சிறப்பு உதவி ஆய்வாளர்<br>Age : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 03.06.2026.

1,2 **எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை** :

நான் தற்போது கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி திரு. ரவிசந்திரன் உதவி ஆய்வாளர் பணியிடமாறுதலில் சென்றுவிட்ட காரணத்தாலும் மேற்படி விசாரணை அதிகாரியின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் நீதியின் நலன் கருதி துரிதமாக விசாரணையை முடிக்கவேண்டும் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 24.07.2018ம் தேதியன்று 17.00 மணியளில் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் திரு. ஏகாம்பரம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவண்ணாமலை அரசு மருத்துவமனை மருத்துவகல்லூரி தகவலை பெற்று அங்கு சென்று உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜுவா, வயது 26 க/பெ. சேகர் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 18.00 மணிக்கு நிலையம் சேர்ந்து நிலைய சி.எஸ்.ஆர்.எண்.215/2018யை பதிவு செய்துள்ளார். அந்த புகார்

வாக்குமூலம் **அ.சா.ஆ.3** ஆகும். பின்னர் 31.07.2018ம் தேதியன்று 18.00 மணியளவில் இவ்வழக்கை உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவர் மேற்படி புகார் மனுவினையும், சி.எஸ்.ஆரையும் தனது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிலைய குற்ற எண்.657/2018, ச/பி 294(பி), 323, 324, 506(2) இ.த.ச.வின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் மறுநாள் 01.08.2018ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான சோ.நம்மியந்தல் கிராமம் சேகர் நிலத்திடம் சென்று சாட்சிகள் பச்சையப்பன், பவுன்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.5** மற்றும் **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகள் ஜீவா, சேகர், விஜயா, செல்வம், குமாரி, வெண்ணிலா, பச்சையப்பம் மற்றும் பவுன்குமார் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணை மூலமும் தனது விசாரணையின் மூலமும் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவரவே எதிரிகளைத் தேடிவந்த நிலையில் எதிரிகள் சீத்தாராமன் மற்றும் அனார்கலி ஆகியோர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் முன்பிணை உத்தரவின் பேரில் எதிரிகள் பிணையில் சென்றதை அறிந்து 1, 2 எதிரிகளை கைதுசெய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 ஜீவா என்பவருக்கு திருவண்ணாமலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சையளித்த மருத்துவர்.திரு.அருண்குமார் என்பவரை விசாரணை செய்து விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆகும். அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவரின் விசாரணை மூலமும், சாட்சிகளின் விசாரணை மூலமும் அ.சா.1யை 1ம் எதிரி கொடுவாளால் தலை மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், அ.சா.2யை 1 மற்றும் 2 எதிரிகள் கையாலும் காலாலும் அடித்து உதைத்தாகவும், விசாரணையில் தெரியவந்ததால் இவ்வழக்கின் ச/பி இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இ.த.ச.வில் என்பதில் இருந்து ச/பி. இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 352, 506(2) இ.த.ச.என சட்டப்பிரிவு மாற்றம் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். இத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிரிகளுக்கு எதிராக குற்ற

இறுதியறிக்கை 10.08.2018ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை ஏதும் செய்யாமல் போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்